# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2015

| தரம் : 11 | வணிகக்கல்வியும் கணக்கீடும் | நேரம் : |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் : ........................................................ | 3.00 மணித்தியாலம் |

பகுதி - I

**01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான விடையைத் தெரிவு செய்க.**

01. தேவை, விருப்பம் தொடர்பான பல்வேறுபட்ட குணாம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   A. பொதுவானவை
   B. வரையறுக்கப்பட்டவை
   C. பல்வேறுபட்டவை
   D. வரையறுக்கப்படாதவை
   E. இரண்டாம் நிலைக்குரியவை
   F. கட்டாயம் நிறைவேற்ற வேண்டியவை
   மேற்கூறியவற்றுள் விருப்பம் தொடர்பாக சரியானவை,
   1) A, B, C   2) C, D, E   3) A, B, F   4) D, E. F

02. தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்து கொள்ள பண்டங்களையும் சேவைகளையும் தாமாகவே உருவாக்கிக் கொள்ளும் செயன்முறை,
   1) சிற்றளவு உற்பத்திகள்   2) முதன்மை உற்பத்திகள்   3) நேரில் உற்பத்திகள்   4) நேர் உற்பத்தி

03. அறிவு, நுட்பம், திறன் போன்ற உற்பத்திகள் எவ்வாறு அழைக்கப்படும்?
   1) பொருட்கள்   2) சேவைகள்   3) எண்ணங்கள்   4) வளங்கள்

04. "ஐந்து நெல் மூடைகளுக்கு ஒரு மாடு பரிமாற்றும்போது, இரண்டு நெல் மூடைகளுக்கு மாட்டினைப் பரிமாற்றிக் கொள்வது மிகவும் சிரமமாக இருந்தது."
   மேற்கூறிய பண்டமாற்றும் முறையில் காணப்பட்ட பிரச்சினை பின்வருவனவற்றுள் எதுவாகும்?
   1) பண்டங்களை சேமித்து வைக்க முடியாமை   2) பெறுமதிகளை மதிப்பிடுவதில் சிரமம்
   3) பண்டங்களைச் சிறிய பகுதிகளாகப் பிரிக்க முடியாமை   4) இரட்டைப் பொருந்துகை இன்மை

05. பின்வருவனவற்றுள் நிறுவனம் ஒன்றுக்கான பலவீனமாகக் கருதப்படுவது எது?
   1) சமாதானம்   2) சிறந்த தலைமைத்துவம்   3) திறனற்ற ஊழியர்கள்   4) யுத்த நிலைமை

06. பங்குடமை ஒன்று ஆரம்பிக்கக்கூடிய சட்டம் எது?
   1) 1890ம் ஆண்டின் பங்குடமைக் கட்டளைச் சட்டம்   2) 1990ம் ஆண்டின் வியாபார பெயர்ப்பதிவுச் சட்டம்
   3) 2007ம் ஆண்டின் கம்பனிச் சட்டம்   4) 1972ம் ஆண்டின் கூட்டுறவுச் சங்கச் சட்டம்

07. அலகுக்கான உற்பத்திக் கிரயத்தில் நேரடியாக இனங்காண முடியாத உழைப்பின் பெறுமதி
   1) நேர் பொருள் கிரயம்   2) நேரில் கூலிக் கிரயம்   3) நேரில் செலவுகள்   4) நேர் செலவு

08. 'X' எனும் வணிகத்தால் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படும் வங்கிக்கடனானது, வணிகத் திட்டத்தின் எப் பகுதியாகும்?
   1) சந்தைப்படுத்தல் திட்டம்   2) செயற்பாட்டுத் திட்டம்   3) நிதித் திட்டம்   4) மனிதவளத் திட்டம்

09. காசோலையில் "கைமாறத் தகாதது" எனும் பதம் குறிப்பது
   1) காசோலையை யாருக்கும் கைமாற்ற முடியாது என்பதை
   2) பாதுகாப்பற்ற காசோலை என்பதை
   3) பெறுபவருக்கு இருக்கும் உரிமையை விட வழங்குபவருக்கு இருக்கும் உரிமை அதிகம் என்பதை
   4) சிறப்பு முறை குறுக்குக் கோடிடல் என்பதை

10. வாடிக்கையாளர் தமது வைப்புக்களிலுள்ள பணத்தைப் பொருட்கள் சேவைகளைப் பெறுவதற்கு பயன்படுத்துவதற்காக வணிக வங்கிகளால் வழங்கப்படும் அட்டைகள்,
   1) வரவட்டை   2) கடனட்டை   3) முற்கொடுப்பனவு அட்டை   4) ரெலர் அட்டை



kalvi.lk

11. பின்வருவனவற்றுள் வைப்புக்களை ஏற்காத நிறுவனங்கள்
   1) நிதிக்கம்பனிகள், அபிவிருத்தி வங்கிகள், பணத்தரகு நிறுவனங்கள்
   2) அபிவிருத்தி வங்கி, சேமிப்பு வங்கி, வியாபார வங்கிகள்
   3) வியாபார வங்கிகள், குத்தகைக் கம்பனிகள், சேமிப்பு வங்கிகள்
   4) வியாபார வங்கிகள், பணத்தரகு நிறுவனங்கள், குத்தகைக் கம்பனிகள்

12. பின்வருவனவற்றுள் எது தேசிய சேமிப்பு வங்கியில் ஆரம்பிக்கக்கூடிய சிறுவர் சேமிப்புக் கணக்காகும்?
   1) அருணலு   2) புஞ்சி ஹப்பன்   3) சிங்கிதி   4) ரண் கெகுளு

13. பின்வருவனவற்றுள் எது ஆயுளுறுதி ஒன்றுக்குப் பொருந்தாது?
   1) நட்டம் நிச்சயமாக நிகழும்.
   2) காப்புறுதி ஒப்பந்தத்தை சாட்டுதல் செய்ய முடியாது.
   3) மேலதிக இலாபங்கள் கிடைப்பதில்லை.
   4) ஒப்பந்த பெறுமானம் காப்புறுதி செய்பவரின் விருப்பத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

14. பின்வருவனவற்றுள் எது அரச துறையில் காணப்படும் காப்புறுதி நிறுவனமாகும்?
   1) சிலிங்கோ இன்சுரன்ஸ் PLC   2) AIA இன்சுரன்ஸ் லங்கா PLC
   3) வரையறுத்த இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்   4) யூனியன் அசுரன்ஸ் PLC

15. பின்வருவன தொடர்பாடல் தொடர்பான சில சொற்பதங்கள் ஆகும். அவற்றுள் தொடர்பாடல் செயல்முறையில் சம்பந்தப்படுபவை எவை?
   A. செய்தி   B. வேகம்   C ஊடகம்
   D. துலங்கல்   E. கிரயம்   F. நம்பகம்
   1) A, B, C   2) B, C, D   3) B, E, F   4) A, C, D

16. வெளியகத் தொடர்பாடல் சாதனங்களில் ஒன்றான இலத்திரன் தபால் (e-mail) பெரிதும் விரும்பப்படுவதற்கான மிகப் பிரதான காரணம்
   1) செய்தியை எல்லோருக்கும் அனுப்பலாம்.   2) தொழில்நுட்பச் சாதனங்கள் தேவைப்படாது.
   3) மிக விரைவாக செய்தியைப் பரிமாற்றலாம்.   4) புரிந்துகொள்ள அறிவு அவசியமில்லை.

Education கல்வி අධ්‍යාපන

17. X நிரலில் போக்குவரத்தின் அடிப்படை அம்சங்களும், Y நிரலில் அவற்றின் வகைப்படுத்தல்களும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. பாதை | A. எரிபொருள் |
| 2. ஊடகம் | B. துறைமுகம் |
| 3. சக்தி | C. லொறி |
| 4. தரிப்பிடம் | D. நீர்வழி |
| | E. பெருந்தெரு |
| | F. கப்பல் |
| | G. சூரிய சக்தி |
| | H. விமான நிலையம் |

X நிரலிலுள்ளவற்றை Y நிரலுக்கு பொருத்தும்போது, சரியான ஒழுங்குமுறை பின்வருவனவற்றுள் எது?
   1) 1-C, F/2-A, G/3-B, H/4-D, E   2) 1-D, E/2-A, H/3-A, G/4-B, H
   3) 1-D, E/2-C, F/3-A, G/4-B, H   4) 1-B, H/2-D, E/3-C, F/4-A, G

18. பின்வருவனவற்றுள் நீண்டகால நிதித்தேவையாகக் கருதப்படுவது
   1) காப்புறுதி தவணைக்கட்டணம் செலுத்துதல்   2) பொறியொன்றினைக் கொள்வனவு செய்தல்
   3) அலுவலக எழுதுபகரணங்கள் கொள்வனவு   4) ஊழியர் சம்பளக் கொடுப்பனவு

19. பங்குச் சந்தையில் பங்கு முதலீட்டின் போது, பெற்றுக்கொள்ள முடியாத நன்மை ஒன்று
   1) பங்குலாபம்   2) மூலதன இலாபம்
   3) வட்டிவருமானம்   4) திரவத்தன்மையும் பிணை வைப்பும்

20. கிரி என்பவர் கம்பனி ஒன்றில் ஒவ்வொன்றும் ரூ. 20.00 பெறுமதியான 100 சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்து, அப்பங்கிற்கான சந்தைவிலை ரூ. 22.00 ஆக அதிகரித்த போது, 50 சாதாரண பங்குகளை மாத்திரம் ஹரி என்பவருக்கு விற்றார். இதன்போது அவர் பெற்ற மூலதன இலாபம் யாது?
   1) ரூ. 50.00   2) ரூ. 100.00   3) ரூ. 150.00   4) ரூ. 200.00



kalvi.lk

31.12.2014 திகதியில் நிறுவனமொன்றின் கணக்கீட்டுச் சமன்பாடு பின்வருமாறு காணப்பட்டது.

| **சொத்துக்கள்** | = | **மூலதனம்** | + | **பொறுப்புக்கள்** |
|---|---|---|---|---|
| +50000 | = | | | +50000 |

21. மேலுள்ள சமன்பாட்டில் பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல் எது?
    1) ரூ. 50000 பெறுமதியான சரக்குகள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டமை
    2) கடன் கொடுத்தோருக்கான கொடுப்பனவு ரூ. 50000
    3) ரூ. 50000 பெறுமதியான சரக்குகள் கடனுக்கு விற்கப்பட்டன.
    4) உடைமையாளர் மீள எடுத்த காசு ரூ. 50000

22. ரூ. 40000 பெறுமதியான சரக்குகள் ரூ. 60000 ற்கு விற்கப்பட்டது. இக்கொடுக்கல் வாங்கலை கணக்கீட்டுச் சமன்பாட்டில் எவ்வாறு காட்டுவீர்?

| | **சொத்துக்கள்** | = | **மூலதனம்** | + | **பொறுப்புக்கள்** |
|---|---|---|---|---|---|
| 1) | (40 000) | = | (40 000) | | |
| 2) | + 60 000 | = | + 40 000 | + | 20 000 |
| 3) | (60 000)<br>40 000 | = | + 20 000 | | |
| 4) | (40 000)<br>60 000 | = | + 20 000 | | |

23. பின்வரும் கணக்கு வகைகளுள் வாடகைக் கணக்கு உரித்தானது
    1) சொத்துக்கள் கணக்குக்கு ஆகும்.
    2) உரிமைக் கணக்குக்கு ஆகும்.
    3) செலவீனங்கள் கணக்குக்கு ஆகும்.
    4) வருமானக் கணக்குக்கு ஆகும்.

24. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களில் எது கணக்கேடுகளில் பதியப்பட முடியாதது?
    1) தொலைபேசிக் கட்டணம் ரூ. 5000
    2) வணிகத்திற்கு ஊழியர் இருவரை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டது
    3) சொந்த தேவைக்கு ரூ. 1000 பற்று செய்யப்பட்டது
    4) பிற வருமானங்களாக ரூ. 2000 கிடைத்தது

25. காசுப்பெறுவனவு, வெளித்திரும்பல் போன்றவற்றைப் பதிவதற்குத் தேவையான மூல ஆவணங்கள் முறையே,
    1) கச்சாத்தும், பற்றுச்சீட்டும்
    2) பற்றுச்சீட்டும், கச்சாத்தும்
    3) பற்றுச்சீட்டும், வரவுத்தாளும்
    4) பற்றுச்சீட்டும், செலவுத்தாளும்

**பின்வரும் தகவலின் அடிப்படையில் 26 ஆம், 27 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| | | | |
|---|---|---|---|
| கசேட்டு வங்கி மீதி | ரூ. 19800 | நேரடி வைப்பு | ரூ. 8400 |
| பங்குலாபம் | ரூ. 4900 | வரி | ரூ. 800 |
| சமர்ப்பிக்கப்படாத காசோலை | ரூ. 21600 | வங்கிக்கட்டணம் | ரூ. 1200 |
| வசூலிக்கப்படாத காசோலை | ரூ. 17100 | | |

26. மேற்படி தகவலின்படி சீராக்கிய காசேட்டு வங்கி மீதி
    1) ரூ. 30100 2) ரூ. 33100 3) ரூ. 31100 4) ரூ. 29400

27. வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின்படி வங்கி மீதி
    1) ரூ. 53600 2) ரூ. 26600 3) ரூ. 35600 4) ரூ. 26700

28. கடன்பட்டோரிடமிருந்து விரைவாக கடனைத் திருப்பி பெறுவதற்காக பயன்படுத்தப்படும் கழிவு
    1) பெற்ற கழிவு 2) கொடுத்த கழிவு 3) வியாபாரக்கழிவு 4) கணியக் கழிவு

29. கொள்வனவுத் திரும்பல் ரூ. 5000 இதற்கான இரட்டைப் பதிவு

| | | |
|---|---|---|
| 1) வெளித்திரும்பல் கணக்கு வரவு | 5000 | |
| கடன்பட்டோர் கணக்கு செலவு | | 5000 |
| 2) உட்திரும்பல் கணக்கு வரவு | 5000 | |
| கடன்பட்டோர் கணக்கு செலவு | | 5000 |
| 3) கடன் கொடுத்தோர் கணக்கு வரவு | 5000 | |
| வெளித்திரும்பல் கணக்கு செலவு | | 5000 |
| 4) கடன்பட்டோர் கணக்கு வரவு | 5000 | |
| உட்திரும்பல் கணக்கு செலவு | | 5000 |



kalvi.lk

**2014.12.31ல் உள்ளவாறான X வணிகத்தின் சொத்துக்கள், பொறுப்புக்கள் பின்வருமாறு**

| | | |
|---|---|---|
| மோட்டார் வாகனம் | ரூ. | 100,000 |
| வங்கிக் கடன் | ரூ. | 25.000 |
| கடன்பட்டோர் | ரூ. | 50,000 |
| கடன்கொடுத்தோர் | ரூ. | 50,000 |
| காசு | ரூ. | 24,000 |

30. 2014.12.31ல் உள்ளவாறான X வணிகத்தின் மூலதனம்
1) ரூ. 98 000 2) ரூ. 99 000 3) ரூ. 51 000 4) ரூ. 15 000

31. பின்வருவனவற்றுள் எது வெளிக்காட்டும் வழுவாகும்?
1) எழுதுகருவி கொள்வனவு ரூ. 5000, கொள்வனவுக் கணக்கில் பதியப்பட்டது.
2) காசு விற்பனை ரூ. 1000 இரு கணக்குகளிலும் குறைத்து பதியப்பட்டது.
3) சம்பளம் கொடுத்தது ரூ. 2000, காசேட்டில் சரியாகவும் சம்பளக் கணக்கில் பிழையான பக்கத்திலும் பதியப்பட்டது.
4) எடுப்பனவு ரூ. 1500 இருமுறை ஏடுகளில் பதியப்பட்டது.

32. ரூ. 3000 கொள்வனவுக் கட்டளையொன்று கொள்வனவுக் கணக்கில் சரியாகவும், கடன்கொடுத்தோர் கணக்கில் ரூ. 30000 எனவும் பதியப்பட்டது. இதைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு,

| | | |
|---|---|---|
| 1) தொங்கல் கணக்கு வரவு | ரூ. 27000 | |
| கடன்கொடுத்தோர் கணக்கு செலவு | | ரூ. 27000 |
| 2) கடன்கொடுத்தோர் கணக்கு வரவு | ரூ. 27000 | |
| தொங்கல் கணக்கு செலவு | | ரூ. 27000 |
| 3) தொங்கல் கணக்கு வரவு | ரூ. 30000 | |
| கடன்கொடுத்தோர் கணக்கு செலவு | | ரூ. 30000 |
| 4) கடன்கொடுத்தோர் கணக்கு வரவு | ரூ. 30000 | |
| தொங்கல் கணக்கு செலவு | | ரூ. 30000 |

33. சிவா வணிக சில்லறைக் காசேட்டு வசக்கட்டு ரூ. 2000 ஆகும். 31.12.2014ல் சில்லறைக் காசாளரிடமிருந்தது மீதி ரூ. 175 ஆகும். அதே தினத்தில் சில்லறைக் காசேடு மீள நிரப்பப்பட்டது. மீள் நிரப்பலுக்கான இரட்டைப் பதிவு,

| | | |
|---|---|---|
| 1) காசேடு வரவு | ரூ. 2000 | |
| சில்லறைக் காசேடு செலவு | | ரூ. 2000 |
| 2) சில்லறைக் காசேடு வரவு | ரூ. 1825 | |
| காசேடு செலவு | | ரூ. 1825 |
| 3) சில்லறைக் காசேடு வரவு | ரூ. 2000 | |
| காசேடு செலவு | | ரூ. 2000 |
| 4) காசேடு வரவு | ரூ. 1825 | |
| சில்லறைக் காசேடு செலவு | | ரூ. 1825 |

34. பின்வருவனவற்றுள் மூலதனச் செலவினுள் அடங்காதது
1) நிறுவனம் ஒன்றுக்கு வாங்கப்பட்ட ரூ. 500 000 பெறுமதியான வான்
2) ரூ. 10 000 பெறுமதியான கட்டிடம் ஒன்று வாங்கியமை
3) இயந்திரமொன்றை பொருத்துவதற்கான செலவு ரூ. 10 000
4) ரூ. 25 000 ற்கு வணிக நிறுவனத்தின் ஒரு பகுதிக்கு தீந்தை பூசப்பட்டது

35. வணிகமொன்று ரூ. 300 000 ற்கு இயந்திரமொன்றை வாங்கியது. இதன் பயன்தரு ஆயுட்காலம் 10 ஆண்டுகள். ஆயுட்கால முடிவில் இயந்திரத்தின் எஞ்சிய பெறுமதி ரூ. 10 000 ஆக மதிப்பிடப்பட்டது. இயந்திரத்திற்கான வருடாந்த பெறுமானத் தேய்வு யாது?
1) ரூ. 200 000 2) ரூ. 30 000 3) ரூ. 20 000 4) ரூ. 29 000



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

* பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

**31.12.2014ல் சிவா வணிகத்தின் பரீட்சை மீதி வருமாறு:**

| விபரம் | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| இருப்பு 01.01.2014 | 13000 | |
| கொள்வனவு | 45000 | |
| விற்பனை | | 85000 |
| மூலதனம் | | 302000 |
| கடன்பட்டோர் | 50000 | |
| காணி கட்டிடம் | 100000 | |
| தளபாடம் | 100000 | |
| காரியாலய உபகரணம் | 200000 | |
| வங்கிக்கடன் 9% | | 100000 |
| காசு | 30000 | |
| உட்திரும்பல் | 5000 | |
| வெளித்திரும்பல் | | 6000 |
| கடன்கொடுத்தோர் | | 65000 |
| காப்புறுதி | 15000 | |
| | **558000** | **558000** |

மேலதிக தகவல்கள்:
1) 31.12.2014ல் சரக்கிருப்பு ரூ. 7000
2) முற்செலுத்திய காப்புறுதி ரூ. 1000
3) கடன்பட்டோரில் 5% அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்படல் வேண்டும்.

36. 31.12.2014ல் முடிவடைந்த ஆண்டுக்கான சிவா வணிகத்தின் விற்பனைக் கிரயம்
1) ரூ. 37000 2) ரூ. 54000 3) ரூ. 44000 4) ரூ. 45000

37. 31.12.2014ல் முடிவடைந்த ஆண்டுக்கான இவ்வணிகத்தின் மொத்த இலாபம்
1) ரூ. 37000 2) ரூ. 35000 3) ரூ. 32000 4) ரூ. 33000

38. 31.12.2014ல் இருந்தவாறான இவ்வணிகத்தின் ஐந்தொகையில் காணப்படும் தேறிய கடன்பட்டோர் தொகை
1) ரூ. 50000 2) ரூ. 42500 3) ரூ. 43500 4) ரூ. 47500

39. 31.12.2014ல் உள்ளவாறான மொத்த நடைமுறையில்லாச் சொத்துக்கள்
1) ரூ. 400000 2) ரூ. 85500 3) ரூ. 300000 4) ரூ. 87500

40. 31.12.2014ல் முடிவுற்ற ஆண்டுக்கான இலாபநட்டக்கணக்கில் காட்டப்படும் காப்புறுதி தொகை யாது?
1) ரூ. 13000 2) ரூ. 14000 3) ரூ. 16000 4) ரூ. 15000



kalvi.lk

## பகுதி - II

**1 ஆம் வினா உட்பட, பகுதி I இல் இரண்டு வினாக்களுக்கும்**
**பகுதி II இல் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. சாரங்கனின் தந்தையார் சாரதி ஆவார். அவருடன் பல சந்தர்ப்பங்களில் செல்லும்போது ஏற்படுகின்ற விபத்துக்கள் வாகன அதிகரிப்பு, வீதிகளின் திருத்தம் என்பன தொடர்பில் அறிந்திருந்தார். இதனால் தனது கல்வியை முடித்துக்கொண்டு 01.01.2014 இல் சாரங்கா சாரதிப் பயிற்சிக் கல்லூரி என்ற பெயரில் யாழ் நகரத்தில் ஆரம்பித்தார். இதற்கென தன்னிடம் வைப்பில் உள்ள 500000 ரூபாவையும் தந்தையாரிடம் உள்ள 2000000 பெறுமதியான கயஸ் வாகனத்தையும் கடனாகப் பெற்று ஆரம்பித்தார். 2014 தை மாதத்தில் அவரது கொடுக்கல் வாங்கல்கள்

| | |
|---|---|
| ஆட்டோ ஒன்று கொள்வனவு | 450000 |
| வகுப்பறைக்கான தளபாடம் | 50000 |
| பெற்ற வங்கிக்கடன் | 800000 |
| கட்டிட வாடகை | 15000 |
| பணியாளருக்கு செலுத்திய சம்பளம் | 10000 |
| பயிற்சிக் கட்டண அறவீடு | 80000 |
| தந்தையாருக்கு திருப்பிச் செலுத்தியது | 800000 |

1) அ) குறிக்கோள்களின்படி இவ்வணிகம் எந்த வகையில் அடங்கும்?

ஆ) உடமையின் அடிப்படையில் வகைப்படுத்தும்போது, இந்த வணிகம் எந்த வகையில் அடங்கும்?

2) இவ்வணிகம் விசேட அனுமதிப்பத்திரம் பெற்றே செயற்படமுடியும். அதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனம் எது?

3) வணிகத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதால் இந் நிறுவனத்திற்குக் கிடைக்கும் நன்மைகள் எவை?

4) சாரங்கன் தனது தந்தையாருடன் எழுத்து மூல ஒப்பந்தம் ஒன்றைப் பேண வேண்டுமா? அவ்வாறாயின் எச்சந்தர்ப்பத்தில் ஏற்படுத்த வேண்டும்?

5) இவ்ணிகத்தைப் பதிவு செய்தல் இலகுவான காரியம் அல்ல எனினும் பதிவு செய்வதனால் ஏற்படும் அனுகூலங்கள் நான்கு தருக.

6) 31 தை 2014 இல் பொறுப்புக்கள் எவ்வளவு?

7) பெற்ற வங்கிக் கடனுக்கான இரட்டைப் பதிவு எவ்வாறு அமையும்?

8) இவ்வணிகத்தின் தை 31 இல் உள்ளவாறு மூலதனத்தின் பெறுமதி எவ்வளவு?

9) ஆரம்பித்த அன்று இவரது கணக்கீட்டுச் சமன்பாட்டை தொகைகளுடன் எடுத்துக் காட்டுக.

10) சாரங்கன் தனது மூலதனம் 2500000 எனக் கூறுகின்றார். இக்கூற்றை ஏற்பீரா? காரணம் தருக.

(10 x 2 = 20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - I

02. அ) 1) வணிகத்தின் அகச் சூழலில் காணப்படுகின்ற இரண்டு பலங்களையும் பலவீனங்களையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2) வணிக அமைப்புக்களை பல்வேறு வடிவங்களில் பிரிக்க முடியும் எனினும் அவற்றிற்கு விசேடமான பொதுவான தன்மைகள் பலவும் உண்டு. அவற்றின் நான்கினைத் தருக. (2 புள்ளிகள்)

ஆ) பந்தல் அலங்காரப் பலகை (Board) தயாரிப்பில் ராஜன் ஈடுபடுவதற்குத் தீர்மானித்தார். அவரது உற்பத்தித் திட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட உற்பத்திக் கிரயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| பலகைக்கான செலவு ஒன்றுக்கு | 200/= |
| படம் வரையுனருக்கு சம்பளம் ஒன்றுக்கு | 300/= |
| கண்ணாடிக்கான செலவு ஒன்றுக்கு | 100/= |
| பாதுகாப்பு காவலருக்கான சம்பளம் | 2000/= |
| நிறப்பூச்சு, ஆணி மற்றும் ஏனைய செலவு | 5000/= |

மாதமொன்றுக்கு எதிர்பார்க்கப்படும் அலங்காரப் பலகைகள் 25

அ) மாதம் ஒன்றுக்கான மொத்த உற்பத்திக் கிரயத்தைக் கணிக்க. (2 புள்ளிகள்)
ஆ) அலங்காரப் பலகை ஒன்றுக்கான உற்பத்திக் கிரியம் எவ்வளவு? (2 புள்ளிகள்)
இ) 25% இலாபத்துடன் விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனின், அலங்காரப் பலகை ஒன்றுக்கான விற்பனை விலை யாது? (2 புள்ளிகள்)

03. 1) அ) காசோலை குறுக்குக்கோடு இடுவதன் பிரதான நோக்கம் யாது? (1 புள்ளி)
ஆ) வணிக வங்கியில் மாத்திரம் பேணப்படுகின்ற வைப்பு வகை யாது? (1 புள்ளி)

2) இன்று பெரும் அளவில் கடன் அட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் வாடிக்கையாளர் பெறக்கூடிய அனுகூலம் நான்கு தருக. (2 புள்ளிகள்)

3) இலங்கையில் காப்புறுதிச் சபையானது மேற்கொள்ளுகின்ற செயற்பாடுகள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

4) வாய்மொழி, எழுத்து, இலத்திரனியல், குறியீடுகள் போன்ற ஒவ்வொரு ஊடகங்களின் கீழும் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு தொடர்பாடல் முறைகளினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

5) வினைத்திறன் அற்ற களஞ்சியப்படுத்தலினால் நிறுவனம் எதிர்நோக்குகின்ற பிரதிகூலங்கள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

04. 1) வணிகர் ஒருவர் பந்தாய அட்டையைப் பயன்படுத்துகின்றார். இதன் மூலம் அவர் பெற்றுக்கொள்ளக்கூடிய தகவல்கள் யாது?
2) போக்குவரத்து செயற்பாடானது சந்தையை விரிவடையச் செய்கின்றது. இக்கூற்றை விளக்குக.
3) போக்குவரத்தின் அடிப்படை அம்சங்கள் நான்கினையும் குறிப்பிடுக.
4) சேமிப்புக் க/கு ஒன்றையும் நடைமுறைக் கணக்கையும் வேறுபடுத்திக் காட்டுக.
5) உரிமம் பெற்ற விசேட வங்கி என்றால் என்ன? அதன் பிரிவுகளையும் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

## பகுதி - II

05. அ) தனுசன் என்பவரால் 2014.01.01ல் ஆரம்பிக்கப்பட்ட வணிகத்தின் முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| i) தனுசனால் மூலதனமாக இடப்பட்டது | 80000 |
| ii) காதர் என்பவரிடம் இருந்து கடனுக்கு கொள்வனவு செய்த பண்டங்கள் | 50000 |
| iii) வங்கியில் இருந்து பெற்ற கடன் | 30000 |
| iv) உரிமையாளர் சொந்தத் தேவைக்காக எடுத்த காசு | 10000 |
| v) செலுத்திய வங்கிக் கடன் வட்டி | 1200 |

மேலுள்ள கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படும் தாக்கத்தை பின்வரும் வடிவத்தைப் பயன்படுத்துக.

| | சொத்துக்கள் | = | உரிமை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| i) | + 80000 | = | + 80000 | | |
| ii) | | | | | |
| iii) | | | | | |
| iv) | | | | | |
| v) | | | | | |

(04 புள்ளிகள்)



kalvi.lk

ஆ) 2014.03.31ல் ஸ்ரீகரன் வணிகத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களும், பேரேடுகளும் தரப்பட்டுள்ளன. அப்பேரேட்டு மீதிகளைக் கொண்டு போதிய கணக்கீட்டு அறிவு இல்லாத கணக்குப் பதிவாளரால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியும் தரப்பட்டுள்ளது.

**கொடுக்கல் வாங்கல்கள்**

| | | |
|---|---|---|
| A | மூலதனமாக இட்டது | 50000 |
| B | காசுக் கொள்வனவு | 18000 |
| C | விற்பனை | 12000 |
| D | தளபாடம் கொள்வனவு | 10000 |
| E | கொடுத்த வாடகை | 2500 |

**காசுக் கணக்கு**

| விபரம் | தொகை | விபரம் | | தொகை |
|---|---|---|---|---|
| மூலதனம் | 50000 | கொள்வனவு | | 18000 |
| விற்பனை | 12000 | தளபாடம் கொள்வனவு | | 10000 |
| | | கொடுத்த வாடகை | | 2500 |
| | | மீதி/கீ/கொ/செ | | 41500 |
| | 72000 | | | 72000 |

**மூலதனக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| | | காசு | 50000 |

**கொள்வனவுக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| காசு | 18000 | | |
| தளபாடம் | 10000 | | |

**விற்பனை**

| | | | |
|---|---|---|---|
| | | காசு | 10000 |

**கொடுத்த வாடகை**

| | | | |
|---|---|---|---|
| காசு | 2500 | | |

| பரீட்சை மீதி | வரவு | செலவு |
|---|---|---|
| காசுக் கணக்கு | 41500 | |
| மூலதனம் | | 50000 |
| கொள்வனவு | 28000 | |
| விற்பனை | | 10000 |
| தொங்கல் கணக்கு | | 500 |
| | 69500 | 69500 |

அ) பரீட்சை மீதியை தாயாரிக்கும்போது ஏற்பட்ட வழுக்கணக்கில் பரீட்சைமீதியின் கூட்டுத்தொகையைப் பாதிக்காத வழுக்களை எழுதுக. (1 புள்ளி)

ஆ) பரீட்சை மீதியைப் பாதிக்கின்ற வழுக்களை எழுதுக. (2 புள்ளிகள்)

இ) மேற்கூறப்பட்ட வழுக்களைத் திருத்துவதற்கான குறிப்பேடு (3 புள்ளிகள்)

மொத்தம் (10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

06. 2014 ஏப்ரல் மாதத்தின் காஞ்சனா வணிகத்தின் வங்கிநிரலும் வங்கிக் கூற்றும் கீழே தரப்பட்டுள்ளது.

| திகதி | விபரம் | வங்கி | திகதி | விபரம் | வங்கி |
|---|---|---|---|---|---|
| 01.04.2014 | மீதி / கீ / கொ / வ | 50000 | | கபிலன் ch 12809 | 8000 |
| | காசு | 12000 | | வெள்ளை ch12810 | 22000 |
| | காசு | 14000 | | காப்புறுதி ch12811 | 6000 |
| | | | | மீதி/கீ/கொ/செ | 40000 |
| | | **76000** | | | **76000** |
| | மீதி/கீ/கொ/வ | 40000 | | | |

| விபரம் | கொடு | பொறு | மீதி |
|---|---|---|---|
| மீதி/கொ/வ | | | 50000 |
| வைப்பு | | 12000 | 62000 |
| காசோலை 12809 | 8000 | | 54000 |
| காசோலை 12811 | 6000 | | 48000 |
| பங்கு இலாபம் | | 5000 | 53000 |
| மின்கட்டணம் s/o | 3000 | | 50000 |
| வைப்பு மணி | | 4000 | 54000 |
| வங்கிக்கட்டணங்கள் | 1000 | | 53000 |

1) 30.04.2014ல் இருந்தவாறு காசேட்டு வங்கி மீதியைச் சீராக்குக.
2) 30.04.2014ல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்க. (10 புள்ளிகள்)

07. சாரங்கன் வணிகத்தின்
2014.12.31ல் பரீட்சை மீதி

| | | |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு 01.01.2014 | 9500 | |
| கொள்வனவு | 80000 | |
| விற்பனை | | 124000 |
| உட்திரும்பல் | 4000 | |
| வெளித்திரும்பல் | | 2000 |
| உட்சுமை கூலி | 4500 | |
| வங்கிக்கடன் வட்டி | 3000 | |
| சம்பளம் | 18000 | |
| கொடுத்த கழிவு | 3000 | |
| பெற்ற கழிவு | | 6000 |
| தளபாட பெறுமானத்தேய்வு | 2000 | |
| அ,மு.கடன் | 3500 | |
| தளபாடம் | 20000 | |
| தளபாட தேய்வு ஏற்பாடு | | 8000 |
| காப்புறுதி | 3500 | |
| களவு போன நட்டம் | 1500 | |
| நடைமுறையல்லாத சொத்து | 137500 | |
| மூலதனம் | | 150000 |
| | **290000** | **290000** |

31.12.2014ல் இறுதித் தொக்கு 12000
செலுத்த வேண்டிய காப்புறுதி 500
முற்பணமாகச் செலுத்திய சம்பளம் 3000

வேண்டப்படுவது
31.12.2013ல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாபநட்டக் கணக்கு.

(10 புள்ளிகள்)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினுாடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page